பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இதற்கான ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. தேவையானவர்கள் அவர்களுடைய சொந்தப் பொறுப்பிலே மீட்டர்களை வாங்கிக்கொண்டால் அவற்றைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திலே சோதனை செய்து, ஒப்புதல் பெற்று, அந்த மீட்டர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

92—

விளையாட்டு மைதானம்

***1409—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம், ஜெகநாத நகரில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தினைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) வில்லிவாக்கம் வடக்கு ஜெகநாத நகர் முதல் பிரதான சாலை மற்றும் மூன்றாவது பிரதான சாலை சந்திப்பில் அமைந்துள்ள சாலையோர நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,350

2012 ஏப்ரல் 16]

சதுர மீட்டர் ஆகும். தற்போது இதில் 450 சதுர மீட்டர் பரப்பளவில் இறகுப் பந்து மைதானம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 2012–2013 ஆம் ஆண்டில் இந்த நிலப்பரப்பிற்கு 150 மீட்டர் நீளத்தில் சுற்றுச்சுவர் அமைக்கவும், மைதானத்தின் தரைப் பகுதியை உயர்த்தவும் நடைப் பயிற்சிக்கான நடைபாதை அமைக்கவும் மற்றும் சிறுவர் விளையாட்டு மைதானம் அமைக்கவும் ரூபாய் 14 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும். இப்பணி, சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளப்படவுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.*

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய அளவிலும், ஆசிய அளவிலும், உலக அளவிலும் நம்மவர் வெற்றியைக் குவிக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளப்பரிய திட்டங்களை அறிவித்து, பரிசுத் தொகையை அறிவித்து, விளையாட்டுத் துறையில் பொற்காலம் என்பது அம்மா அவர்கள் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றார்களோ, அந்தக் காலம்தான் விளையாட்டுத் துறையின் பொற்காலம் என்று விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் (மேசையைத் தட்டும் ஒலி) பெருமிதத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களைப் போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கிற நிலையில், உள்ளாட்சி அமைப்புகளிலும், குறிப்பாக இந்த வில்லிவாக்கம் தொகுதியில், வடக்கு ஜெகநாத நகரில், தொழிலாளர் பெருமக்கள் நிரம்பியிருக்கிற அந்தப் பகுதியில், விளையாட்டுத் திடலை மேம்படுத்துவதற்காக அறிவித்திருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு உங்கள்வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல, வில்லிவாக்கம் தொகுதி, திருநகர் பகுதியில் ஓர் உள் விளையாட்டு அரங்கம் தேவை. மேற்கு அண்ணா நகர்ப் பகுதியில் ஓர் உள் விளையாட்டு அரங்கம் தேவை. அயனாவரம் பகுதியிலும் விளையாட்டுத் திடல் இல்லாமல் இருக்கிறது. அதற்கான பணிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடுக்கிவிட்டு, அங்கேயும் உள் விளையாட்டு அரங்கமும் விளையாட்டுத் திடலும் அமைவதற்கு ஆவன செய்வார்களா என்பதை உங்கள்மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.*

[2012 ஏப்ரல் 16

வடக்கு ஜெகநாதபுரம் பகுதியில் முதல் தெருவில், first main road–இல் 3 கிரவுண்ட் நிலம் இருக்கிறது. ஏற்கெனவே ஜிம்னாசியம் என்று போர்டு மட்டும் இருக்கிறது. ஜிம்னாசியம் செய்வதற்கான எந்த உடற்பயிற்சி சாதனமும் அங்கே இல்லை. எனவே, முதல் மெயின் ரோட்டிலும் ஒரு ஜிம்னாசியமும், ஏற்கெனவே இருக்கின்ற அந்த ஜிம்னாசியத்திற்கு உபகரணங்களையும் வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், நீங்கள் மூன்று play grounds, ஒரு ஜிம்னாசியத்தை ஒரே கேள்வியில் கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வினா எழுப்பினால் உடனடியாக அதற்கு பதில் கூறப்படும். ஆனால், அதற்குள்ளாகவே உட்கேள்விகளை, மூன்று கேள்விகளாகக் கேட்டிருக்கிறார்கள். முதல் கேள்விக்கு பதிலளிக்க நான் விழைகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எந்தக் காலமாக இருந்தாலும் சரி, விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து, விளையாட்டு வீரர்களுக்கு எந்தெந்த உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது சென்னை மாநகராட்சியில் சேர்க்கப்பட்டுள்ள பகுதிகளை ஒன்றிணைத்துப் பார்க்கும்பொழுது 260 விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. இந்த 260 விளையாட்டு மைதானங்களில் 5 விளையாட்டு மைதானங்களில், அமர்ந்து பார்க்கக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது. இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு இடங்களில் உள் விளையாட்டரங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாநகராட்சியினுடைய நிதிநிலைமையைப் பொறுத்து, அங்கு ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், விளையாட்டு உபகரணங்களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

2012 ஏப்ரல் 16]

கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே செஸ் விளையாட்டிலே அவர் தலைவராக இருக்கிறார். தாராள மனம் படைத்தவர். இந்த விளையாட்டுப் பொருட்களின் விலை குறைவுதான். 50 ஆயிரம் ரூபாய், 1 இலட்சம், 2 இலட்சம் ரூபாய் என்றுதான் வரும். மாண்புமிகு உறுப்பினர் தானாகவே முன்வந்து அந்தப் பகுதிகளுக்கு இந்தப் பொருட்களை வாங்கிக் கொடுத்தால், இந்த அவையின் வாயிலாக அவருக்குப் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு அமைச்சருடைய அந்தக் கருத்தைப் பரிசீலித்து உடனடியாக அதன்படி நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.*

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ளித் தருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அடியொற்றி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற அந்த வேண்டுகோளை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலேயிருந்து ஜிம்னாசியத்திற்கு வேண்டிய எல்லா உபகரணங்களையும் வாங்கித் தருவதற்கு நான் ஒப்புக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஜிம்னாஸ்சியம் செய்வதற்கான அறைக்கூடத்தை அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, தயவுசெய்து, அவருடைய நிதியிலிருந்து இந்தப் பொருள்களை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்து, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அதற்கு நிதி ஒதுக்க வேண்டியதில்லை. உங்களுடைய சொந்த நிதியிலிருந்து வாங்க வேண்டுமென்ற அந்தக் கருத்தைத்தான் வலியுறுத்துகின்றார். அதற்கு உங்களுடைய பதில் என்ன?*

திரு. ஜே.சி.டி. பிரபாகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு ஜெகநாத நகரில், முதல் தெருவில் அமைந்துள்ள ஜிம்னாசியத்திற்கு வேண்டிய உபகரணங்களை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடும், அவருடைய கருணை உள்ளத்தோடும், அவருடைய அன்பாலும், கருணையாலும் வளர்ந்து கொண்டிருக்கிற, அவரால் உருவாக்கி, ஆளாக்கி, அழகு பார்க்கப்பட்டிருக்கிற நான் நிச்சயமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புகழுக்குப் புகழ் சேர்க்கும்விதத்தில், இந்த விளையாட்டு உபகரணங்களை என்னுடைய சொந்த நிதியிலிருந்து வாங்கி அளிப்பேன் என்பதை அன்போடு தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாயைப் போலத்தான் பிள்ளை; நூலைப் போலத்தான் சேலை". எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வாரி வழங்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) கருணை உள்ளம் படைத்த தலைவர். அவருடைய வழித் தோன்றல், அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சொன்னவுடனேயே வாரி வழங்கிவிட்டார். அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.

திரு. கு. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கே.பி. பார்க் பகுதியில் விளையாட்டு மைதானம் உள்ளது. அந்த விளையாட்டு மைதானத்தைச் சீரமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னதுபோல, சென்னை மாநகராட்சியில் ஒன்றாக இணைக்கப்பட்ட பகுதிகளைச்

2012 ஏப்ரல் 16]

சேர்த்து மொத்தம் 260 மைதானங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மைதானத்தையும் கணக்கெடுத்து, அந்தந்தப் பகுதிகளில் என்னென்ன விளையாட்டு விளையாடுகிறார்கள்; அப்படி விளையாடுகின்றவர்களுக்கு என்னென்ன பொருட்கள் தேவைப்படுகின்றன என்பதை மாநகராட்சி நிருவாகம்—மேயர் அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார். அதற்கேற்றவாறு, தங்களுடைய பகுதியில் இருக்கின்ற விளையாட்டு அரங்கத்திற்குத் தேவையான பொருட்களையும் மாநகராட்சியின்மூலமாக வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரி வாரி வழங்குவதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மட்டும்தான் வள்ளல் என்று அறிந்தேன். இப்போது ஆளும் கட்சி உறுப்பினர் அவர்களே, தங்களுடைய சொந்த நிதியை மக்களுக்காகக் கொடுக்க முன்வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். உங்களது தொகுதிகளுக்கு மட்டுமல்லாமல், எதிர்கட்சியாக இருக்கக்கூடிய எங்களுடைய தொகுதிக்கும் வாரி வாரி வழங்கினால் நிச்சயமாக நீங்கள் வள்ளல்களாகவே இருப்பீர்கள். ஆகவே, திண்டுக்கல் நகராட்சிக்குட்பட்ட விளையாட்டு மைதானத்திற்கு, இளைஞர்களுக்கான உடற்பயிற்சிக் கருவிகள் கடந்த காலத்திலே வாங்கப்பட்டிருக்கின்றன. அதுபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பெண்களுக்கான நவீன உடற்பயிற்சிக் கருவிகளையெல்லாம் வாங்கி சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அமைத்துக் கொடுத்தது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் இதுபோன்ற உபகரணங்களைத் துறையின்மூலமாக வாங்குவதுகுறித்து, எங்களது நிதியில்லாமல்—எங்கள் கையில் காசு இல்லை—மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எதிர்காலத்திலே பரிசீலிக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாராள சிந்தனை என்பது அவர்களிடத்திலே இருக்கின்ற பொருளாதாரத்தை வைத்துத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. அந்தச் சிந்தனை அடி மனதிலேயிருந்து வர வேண்டும். அவர்களாக விரும்பிக் கொடுக்கின்ற ஒரு ரூபாய், ஆயிரம் கோடி ரூபாய் கொடுப்பதற்கு இணை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு தோழர் செல்வி பாலபாரதி அவர்கள் அந்தப் பகுதிக்கு அவரவர் சக்திக்கேற்ப நிதி வழங்கலாம். ஏனென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அளவிற்கு அவரால் நிதி கொடுக்க முடியாது. அவருடைய நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும்—அவருடைய சக்திக்கேற்றவாறு அவர் நிதியை ஒதுக்கினால், அதோடு சேர்த்து எங்களுடைய அந்தப் பகுதியைச் சேர்ந்த தோழர்களும் உங்களுக்கு உதவுவார்கள். நிச்சயமாக அந்தப் பகுதிக்கேற்ற எல்லா விளையாட்டுப் பொருள்களும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினரால் திண்டுக்கல்லில் அந்த ஜிம்முக்குத் தேவையான ஒரு பூட்டு வாங்கிக் கொடுக்க முடியும். அதற்கு மேல் எங்களால் முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—15

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கெனவே சொன்னேன். மனம்தான் இதற்குக் காரணம். மனதார ஒரு ரூபாயைக் கொடுத்தால், அதனை விலைமதிப்பிட முடியாது. செல்வி பாலபாரதி அவர்களின் பொருளாதார நிலை எங்களுக்கும் தெரியும். அதற்கேற்றவாறுதான் நாங்களும் இந்தக் கருத்தை இங்கே சொல்கிறோம். விளையாடுவதற்கு ஒரு குண்டு வாங்கிக் கொடுத்தாலே—அது ஒரு பெரிய மதிப்பு, அது கிட்டத்தட்ட ரூ.200, ரூ.500 இருக்கும். (குறுக்கீடு) பூட்டா? அப்படியென்றால்,

2012 ஏப்ரல் 16]

இவர்கள் மனதாரப் பேசவில்லை. ஒரு அனுபவம் உள்ள மாண்புமிகு தோழர்—நாம் எவ்வளவு நல்ல சிந்தனையோடு பேசிக்கொண்டிருக்கிறோம்? நல்ல ஆரோக்கியமான சிந்தனையோடு பேசிக்கொண்டிருக்கிறோம்—பூட்டு போடுகிறார் என்று சொன்னால், அவர் மனதிற்கு அவர் பூட்டு போட்டுவிட்டார். வேறு ஒன்றும் செய்யமுடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. அதை ஒரு விவாதப் பொருளாக்க வேண்டாம். விட்டுவிடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தத்தில் சட்டமன்றத்தில் கேள்வி கேட்பதற்கே எங்களுக்கெல்லாம் பயமாக இருக்கிறது என்பதுதான் உண்மை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ரெங்கராஜன், நான் சொல்லவேண்டியதை நீங்களே சொல்லிவிட்டீர்கள். விளையாட்டு மைதானம் அமைக்கவேண்டியது குறித்து இன்றைக்கு 20 உறுப்பினர்கள் துணைக் கேள்விக் கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் சொன்ன பதிலால் இப்பொழுது யாருமே கையை உயர்த்தவில்லை. (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஹாக்கி மைதானம், கோவில்பட்டி நகராட்சிக்குச் சொந்தமானது. கடந்த 4 ஆண்டுக் காலமாக ஹாக்கி மைதானத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் இப்பிரச்சினையில் வலுவாகத் தலையிட்டு, தற்பொழுது அந்த மைதானம் நமது கையிலே இருக்கிறது. ஆனால் மைதானம் விளையாடுவதற்கோ, பயன்படுத்துவதற்கோ முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி, ஹாக்கி மைதானத்தை விளையாட்டு மைதானமாகக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து*

9 மாநகராட்சிகள், 125 நகராட்சிகள் உட்பட்ட பகுதிகளில் மொத்தம் 211 மைதானங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டிய மைதானமும் இதில் அடங்கும் என்று நான் கருதுகிறேன். அதுகுறித்து உடனடியாக விசாரணை செய்து, அவ்வாறு இருப்பின், உடனடியாக நடவடிக்கை எடுத்து, விளையாடுவதற்கு ஏற்றவாறு செம்மைப்படுத்தியே வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிப் பகுதிகளில் பிளாட் போட்டு விற்கின்றபோது, மைதானம் தேவை என்ற சட்டத்தின்படி பெயரளவில் மைதானமும் போட்டு, பிளாட் விற்பனை செய்கிறார்கள். ஆனால் அப்படி ஒதுக்கப்படுகின்ற மைதானம் விளையாடுவதற்குரிய இடமாக அமைக்கப்படுவதில்லை. பெயரளவிற்கு மைதானம் என்கின்ற ஒரு பெயரில் இடத்தை ஒதுக்கிவிட்டு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) எந்த இடத்தில்* play ground *என்று* earmark *செய்த இடம் வேறு* purpose*–க்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதை நீங்கள்* specific*–ஆகச் சொன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கொடுக்க முடியும்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மதுரை மாநகராட்சியில், பைபாஸ் சாலைக்கு அருகில் பெரிய அளவில் பிளாட் போட்டு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. மைதானத்திற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மைதானத்திற்கு உண்டான பணிகள் எதுவும் நடைபெறவில்லை. இது போல் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது. இதை ஆய்வு செய்து அந்த மைதானங்களை விளையாட்டு மைதானங்களாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் இதுமாதிரியான பிளாட் பிரமோட்டர்கள், வீடுகட்டுவோர் பல ஏக்கர் நிலங்களை வாங்கி, அவர்கள் நம்முடைய அரசுத் துறையின் அறிவுரைப்படி அந்தக் கட்டடங்களைக் கட்டும்பொழுது, இவ்வளவு நிலம் விளையாட்டு மைதானத்திற்காகவும், இவ்வளவு நிலம் பூங்காவிற்காகவும் ஒதுக்கவேண்டுமென்ற அடிப்படையில் ஒதுக்குகிறார்கள். அவ்வாறு நிலங்களை விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கிவிட்டு, காலப்போக்கில் யாரும் பயன்படுத்தாத காரணத்தினால் இதுபோன்ற நிலைமை வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அவர் பொதுவாகச் சொல்கிறார். இப்பொழுது மாட்டுத்தாவணி பக்கம் என்று சொல்கிறார். எந்தெந்த இடங்களில், எந்தெந்த பிரமோட்டர்கள் என்று குறிப்பிட்டு, கட்டடங்கள் உள்ள பகுதிகளில், விளையாட்டு அரங்கத்தை அவர்கள் மாற்றியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து அதை மீட்டு, அந்தப் பகுதிவாழ் மக்கள் விளையாடுவதற்கு ஏதுவான நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டம். பொதுவாக உள்விளையாட்டு அரங்கமோ, வெளி விளையாட்டு அரங்கமோ இல்லை. இதன் விளைவாகப் பொதுவான நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு, தனியார் இடத்தைத் தேடி அலைய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே, திருப்பூரில் ஒரு விளையாட்டு அரங்கம், உள்விளையாட்டு அரங்கம் அமைக்க மாநகராட்சி நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS

[2012 ஏப்ரல் 16

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அங்கே விளைநிலங்களின் விலை அதிகமாக உள்ள காரணத்தினால், பல்வேறு பொது நிகழ்ச்சிகளுக்கு இதுவரை கட்டடங்கள் கட்டுவதற்கோ, விளையாட்டு மைதானங்கள் அமைப்பதற்கோ நிலங்கள் கிடைப்பதில்லை; கையகப்படுத்த முடியவில்லை. ஆனாலும்கூட, அந்தப் பகுதியினுடைய வளர்ச்சியை முன்னோக்கி அந்தப் பகுதியிலும் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்குத் தீவிரமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

குழந்தைகள் உணவீட்டுச் செலவினம்

***4991—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு மற்றும் தனியாரால் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களில் குழந்தை ஒன்றுக்கு வழங்கப்படும் மாத உணவீட்டுத் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*